# கொவிட்-19 க்கு எதிராகத் தடுப்பூசி ஏற்ற, சிறந்த காரணங்கள்

**ஏன் கொவிட்-19க்கு எதிராகத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும்? இதற்குப் பல சிறந்த காரணங்கள் உள்ளன. கொவிட்-19-தடுப்பூசியானது நோயின் தீவிரத் தன்மையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றது. தடுப்பூசி ஏற்றிய நபர்கள் கொவிட்-19 காரணமாக வைத்திய-சாலைகளில் அனுமதிக்கப்படுவதற்கான அபாயம் தடுப்பூசி ஏற்றாதவர்களை விட மிகவும் குறைவாகும். தடுப்பூசி ஏற்றுதல் ஒற்றுமையாகச் செயல்படுவதன் வெயளிப்பாடாகும். பெருந்தொற்றின் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு இது உதவுகின்றது.**

### நோயின் தீவிரத் தன்மையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வது.

கொவிட்-19-நோய் வயதான மனிதர்கள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்களுக்கு மிகவும் ஆபத்தானதாக இருக்க முடியும். இளையோர்கள் மற்றும் ஆரோக்கியமான மனிதர்களுக்கு கொரொனா வைரஸ் தொற்றினால், அனேகமாக இது இலகுவானதாக அல்லது அறிகுறிகள் இல்லாமலேயே சென்று விடும். இருந்தபோதும் அவார்களுக்கும் கூட இது ஒரு தீவிர நோய்த் தன்மையையும் ஏற்படுத்தலாம். இத் தடுப்பூசியால் கொவிட்-19 நோயேற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதிலிருந்து உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளலாம். அடிப்படை நோயெதிர்ப்பு ஏற்பட்ட பின்னர் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுங்கள். அதன் பின்புதான் நீங்கள் மேலும் நன்றாகவும் நீண்ட காலத்துக்கும் பாதுகாக்கப்படுகின்றீர்கள்.

### கொவிட்-19 விளைவுகளைத் தவிர்த்துக்கொள்ளல்

ஒரு தொற்றுநோயின் பின்னர் நீண்ட காலம் தொடரக்கூடிய உடல் நலப் பிரச்சினைகள் ஏற்படலாம் (கொவிட்-19 இன் நீண்ட கால பின்விளைவுகள்) - உதாரணமாக கடுமையான வேலைகளின்போது மூச்சுத் திணறல் அல்லது சோர்வு ஏற்படலாம். இது இளையோருக்கு, உடல்நலமான நபர்களுக்கும் ஏற்படலாம். நீங்கள் தடுப்பூசி ஏற்றிக்கொண்டால், நோய் ஏற்படுவதையும் சிலவேளைகளில் நீண்ட காலம் தொடரும் ஆபத்துக்களையும் குறைத்துக் கொள்ளலாம். இதன்போது வித்தியாசப்படுவது என்னவென்றால், சுவிசில் பாவிக்கப்படும் கொவிட்-19-தடுப்பு மருந்துகளை ஏற்றியபின்பு ஏற்படும் கடுமையான பக்கவிளைவுகள் மிகவும் அரிதாகவே உள்ளது. இதனால் பின்விளைவுகளை எதிர்பார்க்கத் தேவையில்லை.

### பாதுகாப்பான முறையில் நோய் எதிர்ப்புச்சக்தியைப் பெறல்

தொற்றலாம் மற்றும் நோய் ஏற்படலாம் என்பதற்காக மட்டும் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறுமாறு பரிந்துரைக்கப்படவில்லை. ஏனெனில் கடுமையான போக்கிற்கும் நீண்டகால விளைவுகளுக்கும் கூட இவை வழிவகுக்கலாம். கொவிட்-19-தடுப்பூசியால் நீங்கள் கொரொனா வைரஸ் மூலம் பாதுகாப்பின்றிய தொற்று ஏற்படலாம் என்ற ஆபத்து இல்லாது, கட்டுப்பாட்டுடன் கூடிய சிறந்த மற்றும் நீண்ட காலத்துக்கான பாதுகாப்பைப் பெறமுடியும்.
சுவிற்சர்லாந்தில் ஒரு தடுபபூசிக்கு அனுமதி வழங்கப்பட்டு அது பரிந்துரைக்கப்படுவதற்கு அதன் பயன்பாடு அதனாலேற்படும் ஆபத்துக்களைவிட குறிப்பிடக்கூடியளவு அதிகமாக இருத்தல் வேண்டும். இத் தடுப்பூசிகளின் இது காலவரையிலுமான அனுவங்கள் இதனை தெளிவாகக் காட்டுகின்றன.
கொரொனா வைரஸ் மூலம் ஏற்கனவே பொசிட்டிவ் என்று பரிசோதிக்கப்பட்ட நபர்கள் கூட தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள வேண்டும். இதன் மூலமாகத்தான் நீங்கள் சிறந்த முறையிலும் நீண்ட காலத்துக்கும் நோயின் கடுமையானதொரு போக்கிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றீர்கள்.

### சுகாதாரத்துறைசார் நபர்களுக்கு உதவுங்கள்

இப் பெருந்தொற்றுநோயால் சுகாதாரத்துறை ஊழியர்கள் மற்றும் சுகாதாரத்துறை நடைமுறைகள் அவ்வப்போது கடுமையான சுமைகளுக்கு உள்ளாக்கியுள்ளது. தடுப்பூசி ஏற்றுவதனால் பெற்றுக்கொள்ப்படும் பாதுகாப்பின் மூலம் நீங்கள் கொவிட்-19 காரணமாக வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய ஆபத்து உங்களுக்கு மிகக் குறைவாகும். இதன்மூலம், சுகாதாரத்துறை நடைமுறைகளில் உள்ள சுமைகளைக் குறைக்க நீங்கள் உதவுகின்றீர்கள். வேறு நோய்கள் மற்றும் அவசரகால சிகிச்சைகள் தொடர்ந்தும் இயலுமானதாக உள்ளது.

### சுற்றாடலில் உள்ள மக்களைப் பாதுகாப்பது

அடிப்படை நோயெதிர்ப்பு மற்றும் பூஸ்டர் தடுப்பூசியின் பின்னரான வாரங்களில் கொரொனா வைரஸ் மூலம் உங்களுக்கு தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகும். இதன் மூலம் மற்றைய நபர்களுக்கு பரவும் ஆபத்தும் கூட குறைவாகும். தொற்றிப் பரவுவதிலிருந்து இப் பாதுகாப்பு மற்றும் இலேசாக நோய்வாய்ப்படுதல், காலப்போக்கில் குறைந்து செல்கின்றது. சுகாதார மற்றும் நடத்தைவிதிகள் பற்றிய பரிந்துரைகள் மேலதிகமாக இருத்தல் முக்கியமாகும். உங்கள் தடுப்பூசி, மற்றும் நடத்தை மூலம், விசேடமாகப் பாதிக்கப்பட்ட நபர்களைப் பாதுகாப்பதற்கு உதவியளிக்க முடியும். உதாரணமாக தடுப்பூசி அதிக தாக்கத்தை ஏற்படுத்தாத பலவீனமான நோயெதிர்ப்பு சக்தியுள்ள மனிதர்களிடத்தில். மருத்துவக் காரணங்களினால் தடுப்பூசி ஏற்றமுடியாத மனிதர்கள் மற்றும் இதுவரைக்கும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கான சாத்தியம் இல்லாத 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள்.

### உளரீதியான ஆரோக்கியத்தைப் பலப்படுத்துங்கள்

கொரொனா வைரஸ் மூலம் ஏற்பட்ட இப் பெருந்தொற்று பரவலால் எமது சக மனிதர்களுடனான தொடர்பு அவ்வப்போது மிகவும் குறைவடைந்துள்ளது. இதனால் நல்வாழ்வு பாதிக்கப்படலாம் மற்றும் உளரீதியான நோய்கள் தாக்கலாம் அல்லது அதிகரிக்கலாம். கொவிட்-19-தடுப்பூசியால் கிடைக்கும் பாதுகாப்பு, பயத்தைக் குறைக்க மற்றும் தொடர்புகளை மீளவும் நிதானமாக மாற்ற உதவலாம். தடுப்பூசியானது எமது சக மனிதர்களுடனான தோழமைக்கு ஒரு சான்றாகும்.

### பெருந்தொற்றின் விளைவுகளைக் கட்டுப்படுத்துதல்

பெருந்தொற்றுநோயைக் கட்டுப்படுத்தவும் வாழ்வில் கவலைகளற்ற மகிழ்வுடன் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கும், சுகாதார- மற்றும் நடத்தை விதிகளின் பரிந்துரைகளைக் கடைப்பிடிப்பதுடன் தடுப்பூசியே மிகச் சிறந்த வழிமுறையாகும். தடுப்பூசி மூலம் உங்கள் தனிப்பட்ட உடல்நலத்திற்கும், பிறரின் ஆரோக்கியத்திற்கும் - சுவிசில், ஐரோப்பாவில், உலகில் - முக்கியமானதொரு பங்களிப்பை வழங்குகின்றீர்கள்.